அன்பார்ந்த பள்ளி சமூகத்தினருக்கு,

ஹாஸ்பிடல் ஆஃப் சிக் சில்ட்ரன் மருத்துவமனை உங்கள் பள்ளியுடன் இணைந்து கோவிட்-19 உமிழ்நீர் பரிசோதனை கருவிகளை கோவிட் -19 சோதனை செய்யும்போது அறிகுறிகள் உள்ள ஊழியர்கள், மாணவர்கள் மற்றும் வீட்டு உறுப்பினர்கள் அல்லது டொராண்டோ பொது சுகாதாரத்தால் (TPH) பரிந்துரைக்கப்பட்டவர்களுக்கு வழங்கி வருகிறது. உமிழ்நீர் பரிசோதனை என்பது வலியில்லாதது மற்றும் உங்கள் பள்ளியில் கோவிட்-19 பரவலை கட்டுப்படுத்த உதவும் வகையில் பரிசோதிக்கப்பட்டு, பள்ளிகள் திறக்கப்படுவதற்கு உதவலாம்.

எங்கிருந்து உமிழ்நீர் பரிசோதனை தொகுப்பை வாங்கலாம்?

- உமிழிநீர் பரிசோதனை தொகுப்புகளை பள்ளியில் உள்ள நியமிக்கப்பட்ட இடங்களில் உங்கள் பள்ளியிலேயே வாங்கிக்கொள்ளலாம்

எப்போது உமிழ்நீர் பரிசோதனை தொகுப்பை பயன்படுத்துவது?

- குறைந்தபட்சம் 1 அல்லது அதற்கு மேற்பட்ட கோவிட்-19 அறிகுறிகள் (காய்ச்சல் அல்லது குளிர்; இருமல் அல்லது குரைக்கும் இருமல்; மூச்சுத் திணறல்; வாசனை குறைதல் அல்லது இழப்பு; குமட்டல்/ வாந்தி மற்றும்/ அல்லது வயிற்றுப்போக்கு) ஒரு சோதனை தொகுப்பை பயன்படுத்தவும் அல்லது
- சில தேதிகளில் சோதிக்கப்பட வேண்டும் என்று பொது சுகாதாரத்தால் உங்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ள தேதிகளில் பயன்படுத்தவும்

உமிழ்நீர் பரிசோதனை தொகுப்பு என்றால் என்ன?

1. உமிழ்நீர் சேகர்ப்பு கொள்கலன் (நீல திரவம் வைரஸை செயலிழக்கச் செய்யும்)
2. சோதனைக்கூட படிவம் (உங்கள் முடிவுகளை பெறுவதற்காக இது கட்டாயம் நிரப்பப்படவேண்டும்)
3. உமிழ்நீர் சேகரிப்பு அறிவுறுத்தல்கள் (சோதனைக்கூட படிவத்தின் பின்புறத்தில்)
4. உங்கள் முடிவுகளை எவ்வாறு அணுகுவது என்பதற்கான அறிவுறுத்தல்கள்
5. உமிழ்நீர் கொள்கலனுக்கான வெற்று லேபிள் (உங்கள் சுகாதார அட்டையின் படி சட்டப்பூர்வ முழு பெயர் மற்றும் பிறந்த தேதியுடன் லேபிள் மற்றும் மாதிரி கொள்கலனில் ஒட்டவும்)

உமிழ்நீர் எவ்வாறு சேகரித்து தொகுப்பை அளிப்பது?

- சோதனைக்கு 30 நிமிடங்களுக்கு முன் சாப்பிடுதல், குடித்தல், புகைபிடித்தல், சூயிங் கம், பல் துலக்குதல், வாப்பிங் போன்றவற்றை செய்யக்கூடாது.
- மாதிரியை சேகரித்து லேபிள் செய்திடுங்கள், தேவையானவற்றை நிரப்பி, பையோஹசார்ட் பையில் சீல் செய்திடுங்கள்
- அறிகுறிகள் இல்லாத மற்றும் நோய்வாய்ப்படாத ஒருவர் திங்கள் முதல் வெள்ளி வரை பள்ளி நேரங்களில் மாதிரியை ஒதுக்கப்பட்ட இடத்தில் அளிக்கலாம்.
- உமிழ்நீர் அறிவுறுத்தல்கள் வீடியோவுக்கான லிங்க் இங்கே உள்ளது: [https://www.youtube.com/watch?app=desktop&v=Ru-vFZdImes&feature=youtu.be](https://www.youtube.com/watch?app=desktop&v=Ru-vFZdImes&feature=youtu.be)

எனது முடிவுகளை நான் எப்போது பெறுவேன்?

உங்கள் பரிசோதனை நேர்மறையாக இருந்தால் (+):

- 24-48 மணிநேரத்திற்குள் உங்களுக்கு சிக்கிட்ஸ்-இலிருந்து அழைப்பு **வரும்** மற்றும் சில நாட்களுக்குள் பொது சுகாதாரத்திடமிருந்து தகவல்களும் அடுத்து என்ன செய்யவேண்டும் என்பதற்கான அறிவுறுத்தல்களையும் பெறுவீர்கள்.

உங்கள் பரிசோதனை எதிர்மறையாக இருந்தால் (-):

- நீங்கள் தொலைபேசி அழைப்பை பேரமாட்டீர்கள் மற்றும் முடிவுகள் ஆன்லைனில் வரும்வரை காத்திருக்கவேண்டும்

பரிசோதனையை செயல்படுத்த முடியவில்லையென்றால்

- மாதிரி பெயரிடப்படவில்லை என்றால், போதுமான உமிழ்நீர் இல்லை அல்லது கோரிக்கை நிரப்பப்படவில்லை என்றால், மாதிரியைச் செயலாக்க இயலாது என்பதை உங்களுக்குத் தெரியப்படுத்த நாங்கள் உங்களை அழைப்போம்.

முடிவுகளை அணுகுதல்

- நீங்கள் 10 இலக்க எண்ணையும் க்ரீன் ஒண்டாரியோ ஹெல்த் கேர் கார்டின் இரண்டு எழுத்து பதிப்பு குறியீட்டை அளித்திருந்தால்:
    - கோவிட்-19 அரசு வலைத்தளத்தில் உங்கள் முடிவுகளை

      அணுகிடுங்கள்: https://covid-19.ontario.ca/

**கோவிட்-19 அரசு வலைத்தளம்**

- உங்களிடம் ஒண்டாரியோ ஹெல்த் கேர் கார்டு இல்லையென்றால், உங்களிடம் சிகப்பு மற்றும் வெள்ளை கார்டு இருந்தால் அல்லது மாகாணத்திற்கு வெளியில் இருந்தால்:
    - கோரிக்கை படிவத்தில் உங்கள் மின்னஞ்சல் முகவரியை அளிக்கவும், நாங்கள் இந்த வலைத்தளத்தில் உங்கள் முடிவுகளைப் பார்ப்பதற்கான ஒரு குறியீட்டை உங்களுக்கு அனுப்புவோம்: https://covid-19.ontario.ca/
    - 4 வணிக நாட்களுக்குள் நாங்கள் பதிலளிக்க வில்லையென்றால், இந்த முகவரிக்கு மின்னஞ்சல் செய்யவும்mobile.outreach@sickkids.ca